# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).

********

முறையீட்டு மனு எண்: 206/2018/பே

ஆணை நாள்: 23–11–2018.

திருமதி. E. சாந்தி,
க/பெ, திரு இசக்கியப்பன்,
4/52, பஞ்சலிங்கபுரம்,
மகாதானபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்

-- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கொட்டாரம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்.

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், 4/52, பஞ்சலிங்கபுரம் பகுதியினைச் சேர்ந்த திருமதி.இ.சாந்தி, க/பெ திரு. இசக்கியப்பன், என்பவரது 27.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 27.09.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, மேற்படி மனுவிற்கு முறையீட்டு மனு எண்.206/2018 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையில் கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திருமதி.இ.சாந்தி, தனது முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சி 14–வது வார்டில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகையை சம்பந்தப்பட்ட துறைக்கு செலுத்தியமைக்கான சான்று பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்படவில்லையெனவும், பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் பிணை வைப்புத் தொகையினை திரும்ப வழங்கவில்லையெனவும், தனது ஒப்பந்தத்தினை 2017–18 மற்றும் 2018–19–ஆம் ஆண்டிற்கு பேரூராட்சியால் புதுப்பித்துத் தரப்படவில்லை எனவும் புகார்கள் தெரிவித்து, விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 05.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 30.10.2018 நாளிட்ட அறிக்கை மூலம் தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பான விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2018 அன்று நேரில் ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர் மற்றும் கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு 08.11.2018 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

திருமதி.இ.சாந்தி, க/பெ திரு.இசக்கியப்பன், தனது 13.11.2018 நாளிட்ட கடிதத்தில் முறைமன்ற நடுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் தன்னால் செய்யப்பட்ட ஒப்பந்தப் பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகை உரிய தலைப்பில் செலுத்தப்பட்டமைக்கான சான்று பெற்றுக் கொண்டதாகவும், பணிகளில் பிடித்தம் செய்த கூடுதல் வைப்புத் தொகையும் காசோலை எண்.315792/நாள்.13.11.2018ன்படி பெற்றுக் கொண்டதாகவும், தனது ஒப்பந்தக்காரர் உரிமமும் பேரூராட்சி செயல் அலுவலரால் புதுப்பித்து தரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, இதன் அடிப்படையில் மேற்படி தனது புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விட்டதால் புகார் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் எனவும், தான் கொடுத்த புகார் மனுவினை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரரின் 13.11.2018 நாளிட்ட ஒப்புதல் கடிதம் ஆகியன பரிசீலிக்கப்பட்டதில், முறையீட்டு மனுதாரர் தனது 27.08.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்கள், இம்முறைமன்ற நடுவ நடவடிக்கைகளுக்குப் பின் சரி செய்யப்பட்டு முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டமையால் முறையீட்டு மனுதாரர் தனது புகாரினை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளார். எனவே, இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கை கைவிடப்படுகிறதென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் இப்பொருள் தொடர்பாக 19.12.2018 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணையும் ரத்து செய்து ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்.

1.திருமதி. இ. சாந்தி,
க/பெ, திரு இசக்கியப்பன்,
4/52, பஞ்சலிங்கபுரம்,
மகாதானபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
கொட்டாரம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.